**O.S. 3/2018 , 15.03.2021, 03.45 pm - 04.00 pm**

**வா.சா.1, ராமன், த/பெ.குழந்தை கவுண்டர்**

சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1, 2 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1999 மற்றும் 2000 ஆகிய இரண்டு வருடங்களில் என் தகப்பனார் என் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து எந்த செட்டில்மெண்டில் சம்மந்தப்பட்டது என்றால் 14.07.2000 வருடத்திற்கான செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1999 வருடத்திய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் 133/4எ2-ல் 1 ஏக்கர் 40 செண்டும், 131/2சி-ல் 1 ஏக்கரா 17 செண்டு குறிப்பிடப்பட்டுள்ளது, அது விவசாய நிலமாகும். 1999 மற்றும் 2000 வருடத்திய பத்திரங்கள் என் தகப்பனாரால் ரத்து செய்யப்பட்டுள்ளது, அதை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. என்னை ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்யும்பொழுது ஆவணங்கள் ரத்து செய்ததை வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் சாட்சி சொன்ன தேதியிலிருந்து 3 வருடங்களுக்கு முன்னர் பார்த்தேன், அப்பொழுது எதுவும் ரத்து செய்யப்படவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளீர்கள். தற்பொழுது மீண்டும் வில்லங்கம் போட்டு செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்துள்ளதை பாரத்தேனா என்றால் அனைத்து வருவாய் துறை ஆவணங்களும் என் பெயரில் உள்ளதால் நான் பார்க்கவில்லை. வில்லங்கம் பார்த்ததாக இதற்கு முன்பு சாட்சியம் அளித்துள்ளீர்கள், அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் பார்க்கவில்லை. என்னுடைய தகப்பனார் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டார் என்றும், சொத்தானது கூட்டுகுடும்ப சொத்து என்பதால் தானசெட்டில்மெண்ட் எழுத அவருக்கு உரிமை இல்லை என்று ரத்து செய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எழுத கொடுத்ததாக சொல்லும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் அமுலுக்கு வராததால் அந்த ஆவணத்தின் மூலம் எனக்கு பாத்தியம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல, என்னுடைய தகப்பனார் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்த பிறகு அனைத்து வருவாய்துறை ஆவணங்களும் என் பெயரில் மாற்றம் செய்யப்பட்டு என்னுடைய அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. உண்மை சங்கதிகளை மறைத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனாரும், மற்றவர்களும் கூட்டுகுடும்பமாக இருக்கும் சொத்தில் இதுநாள்வரை பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று சொன்னால் வாய்மொழி மூலம் பாகப்பிரிவினை ஏற்பட்டு அதனடிப்படையில் அவரவர் அனுபவத்தில் இருந்து வருகிறது. வாய்மொழியாக பிரிக்கப்பட்ட பாகத்தின் அடிப்படையில் தான் வழக்கு சொத்து எனக்கு வந்தது, அதற்கு ஆவணம் என் தகப்பனாரிடமிருந்து தானசெட்டில்மெண்டாக பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான். 1999 மற்றும் 2000 வருடத்திய தானப்பத்திரத்தில் மேற்படி வாய்மொழி மூலமாக கொடுக்கப்பட்ட பாகத்தின் மூலம் தான் தானப்பத்திரம் எழுதப்பட்டது என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்து என்னுடைய தனிப்பட்ட சுவாதீனத்தில் கிடையாது என்றும், என்னுடைய தகப்பனாரின் வாரிசுகளுக்கிடையே கூட்டு சுவாதீன சொத்து என்று

சொன்னால் சரியல்ல. நான் தவறான முறையில் வருவாய் துறை ஆவணங்களை பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன், அது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆகாத சொத்தை பாகப்பிரிவினை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமே தவிர உரிமை கேட்டு தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. கூட்டு பங்குதாரர்களுடைய சொத்து என்பதால் நான் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளை தொந்தரவு செய்ய வேண்டிய காரணத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>** இல்லை.